# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


**<u>விசாரணை நாள் 06.10.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண் CP 982-E-2024</u>**

திரு செ.பெரியசாமி .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
தர்மபுரி ஊராட்சி ஒன்றியம்,
தர்மபுரி - 636 701 .. பொது அதிகார அமைப்பு

******

## <u>ஆணை</u>

1) இவ்வாணையத்தின் 07.09.2026 நாளிட்ட ஆணையை தொடர்ந்து இவ்வழக்கின் முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் / தருமபுரி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) திருமதி இ.கலைச்செல்வி இவ்வாணையத்தில் 06.10.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுபடி, மனுதாரருக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காததற்கான எழுத்து மூலமான விளக்கத்தை ஆணையத்தில் சமர்ப்பித்தார். அந்த விளக்கத்தில், தான் 26.12.2023 முதல் 12.01.2024 வரையில் 15 நாட்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான பயிற்சியில் கலந்து கொண்டு 18.01.2024 அன்று பணியில் சேர்ந்ததாகவும், அதன் பின்னர் மனுதாரருக்கு 31.08.2026 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2) மேற்படி விளக்கத்தை பரிசீலனை செய்த ஆணையம், அவ்விளக்கத்தை ஏற்கவில்லை. ஆகவே, ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழ் அனுப்பிய மனுவில் கோரப்பட்டுள்ள தகவல்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்தில் தகவல் வழங்காத முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் / தருமபுரி துணை வட்டார வளர்ச்சி அலுவலர்

(ஊராட்சிகள்) திருமதி இ.கலைச்செல்விக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)-ன் கீழ் அபராதம் ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) விதித்து ஆணையிடுகிறது. அதனை உரிய அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு, அது குறித்த அறிக்கையை இவ்வாணையத்தில் **26.10.2026** அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / தருமபுரி துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (ஊராட்சிகள்) ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் SA 6809-E-2024</u>**

1) பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
தர்மபுரி ஊராட்சி ஒன்றியம்,
தர்மபுரி - 636 701

2) அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
தர்மபுரி ஊராட்சி ஒன்றியம்,

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக)

3) திரு செ.பெரியசாமி
எண்.5/83, ஜம்புகாளான் கொட்டாய்.
சோலைக் கொட்டாய் 636 704
தர்மபுரி மாவட்டம்

Copy to file
CR/PA